
## 6. புரொஸ்டேட் சுரப்பிப் புற்றுநோய் (சுக்கிலச்சுரப்பி)

### நோய் அறிகுறிகள்

- சிறுநீர் கழிக்க வேண்டிய உபாதை இருந்தாலும் சிறுநீர் கழிப்பதில் சிரமம்.
- சிறுநீர் கழிக்கும்போதும், ஆரம்பிப்பதிலும் தொடர்வதிலும் ஏற்படும் சிரமம்.
- சிறுநீர் கழித்தபின்பும் முற்றாக சிறுநீர் வெளியேறியதாகத் தோன்றாத தன்மை.
- அடிக்கடி சிறுநீர் வெளியேறுதல்.
- இரவில் சிறுநீர் கழிக்கும் எண்ணிக்கை விகிதம் அதிகரித்தல்.
- சிறுநீருடன் குருதி கலந்து வெளியேறுதல்.





## 7. கேடயப்போலிச் சுரப்பிப் புற்றுநோய் (தைரொயிட்)

### நோய் அறிகுறிகள்

மூன்று கிழமைகளுக்கு மேலாகக் காணப்படும் பின்வரும் அறிகுறிகள்,

- தைரொட் சுரப்பி பெரிதாகுதல் அல்லது அளவில் வித்தியாசப்படல்.
- கழுத்தின் இரு பக்கங்களிலும் நெறிகட்டி இருத்தல்.
- காரணமில்லாமல் குரல் கரகரப்படைதல்.
- உமிழ்நீர், உணவு விழுங்குவதில் சிரமம்.
- மூச்சு எடுப்பதில் சிரமம் காணப்படல்.
- கழுத்தில் வலி ஏற்படல்.



## பின்வரும் நோய் அறிகுறிகள் மூன்று கிழமைகளுக்கு மேல் காணப்படுகின்றனவா?

- நீண்ட நாளைக்கு இருக்கும் இருமல் அல்லது சளியுடன் குருதி வெளியேறுதல்.
- குரலில் வித்தியாசம் அல்லது கரகரப்பு.
- சிறுகட்டி, மச்சம் அல்லது பாலுண்ணியில் ஏற்படும் திடீர் வித்தியாசம் அல்லது விரைவான வளர்ச்சி.
- மார்பில் அல்லது வேறு இடங்களில் ஏற்படும் சிறுகட்டி அல்லது தடிப்பு.
- பெண்களில், யோனிவழியூடாக அசாதாரணமான கசிவு அல்லது குருதி பெருக்கு.
- மலம் அல்லது சிறுநீர் கழிக்கும் வழக்கத்தில் மாற்றம் அல்லது அத்துடன் குருதி கலந்து வெளியேறுதல்.
- நீண்ட நாட்களாக, உணவு சமிபாடடையாத தன்மை அல்லது விழுங்குவதில் சிரமத்தன்மை.
- வாயில், வெள்ளை அல்லது சிவப்பு நிறமான தழும்பு அல்லது ஒரு பிரதேசம், வீங்கி வெளித்தள்ளியிருத்தல்.
- கழுத்து அல்லது தைரொயிட்ச் சுரப்பி வீங்கியிருத்தல்.
- திண்ம ஆகாரம் அல்லது நீராகாரம் விழுங்குவதில் கஷ்டம்.
- நீண்ட நாட்களுக்கு ஆறாத புண்கள்.

**மேற்படி இருப்பின், அவை புற்றுநோய்க்குரிய ஆரம்ப அறிகுறிகளாக இருக்கலாம். உடனடியாக உங்கள் வைத்தியரை சந்தியுங்கள்.**

**புற்றுநோயை ஆரம்பத்திலேயே கண்டுபிடித்துக் கொள்வோம்! நோயற்ற வாழ்வை வாழ்வோம்!!**


தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித் திட்டம்.
555, பொதுச் சுகாதார கட்டடத் தொகுதி,
எல்விற்றிக்கல மாவத்தை,
நரகேன்பிட்டிய, கொழும்பு -5.
தொலைபேசி – 0112368627, 0113159227
E : nccpsl@yahoo.com
W : www.health.gov.lk



Produced by: PRINTCARE




# புற்றுநோயை ஆரம்பத்திலேயே கண்டுபிடிப்பதன் மூலம் வாழ்வை வெற்றி கொள்வோம்!

## உங்களுக்குத் தெரியுமா?

மூன்றிலொரு வீதமான புற்றுநோய்களை ஆரம்பத்திலேயே கண்டுபிடிப்பதன் மூலம், முற்றாக குணப்படுத்தலாம்.

**ஆரம்பத்திலேயே கண்டுபிடித்து குணமாக்குவது, உங்களுக்கு ஆரோக்கியமான வாழ்வை வாழ வழிவகுக்கும்.**

# அவதானமாய் இருங்கள்!

புற்றுநோயை ஆரம்பநிலையில் கண்டுபிடிப்பதற்காக கீழ்வரும் நோய் அறிகுறிகள் அல்லது குணங்குறிகள் இருந்தால், உடனடியாக உங்கள் அருகிலுள்ள வைத்தியரிடம் சென்று ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளுங்கள்.


## 1. வாய்ப் புற்றுநோய் அல்லது ஆரம்பநிலையிலுள்ள வாய்ப் புற்றுநோய்

வாய்ப் புற்றுநோய் ஏற்படும் முன்னர், ஆரம்ப நிலையிலேயே அதைக்கண்டுபிடிக்கலாம்.

### நோய் அறிகுறிகள்

❶ நீண்ட நாளாகக் காணப்படும், அகற்ற முடியாத வெள்ளை அல்லது சிவப்பு நிறமான தழும்பு.





❷ நீண்ட நாளாகக் காணப்படும், அகற்ற முடியாத வெள்ளையும் சிவப்பு நிறமும் கலந்த தழும்பு.

❸ வாயில் ஏற்படும் அசாத்தியமான எரிவு, உதடும். வாயினுள் தோன்றிய மென்படலமும் தடித்தும் வெள்ளையாகவும் காணப்படல்.



❹ வாயினுள் காணப்படும் நீண்ட நாட்களுக்கு ஆறாத புண்.

❺ நாக்கை மடிக்கவும், வாயைத் திறக்கவும் ஏற்படும் கடின நிலைமை.


**இந்த அறிகுறிகள் இருந்தால், உடனடியாக உங்கள் அருகிலுள்ள பல் சத்திர சிகிச்சை வைத்தியரின் அறிவுரையைப் பெறுங்கள்.**

## 2. உணவுக் கால்வாய்ப் புற்றுநோய்

### நோய் அறிகுறிகள்

மூன்று கிழமைகளுக்கு மேலாகக் காணப்படும், பின்வரும் நிலைமைகள்

- படிப்படியாக அதிகரித்துச் செல்லும், உணவு விழுங்குவதில் ஏற்படும் கஷ்டம் அல்லது சிரமத்தன்மை.
- உணவு விழுங்கும்போது வலி ஏற்படல்.
- உடல் நிறை, குறைவடைந்து மெலிந்து செல்லல்.




## 3 பெருங்குடல் மற்றும் மலவாசல் புற்றுநோய்

### நோய் அறிகுறிகள்

மூன்று கிழமைகளுக்கு மேலாகக் காணப்படும், பின்வரும் நிலைமைகள்

- மலத்துடன் குருதி வெளியேறுதல்.
- மலம் கழிக்கும் முறையில் மாற்றம் காணப்படல்.
- அடிக்கடி ஏற்படும் மலச்சிக்கல் அல்லது மலவாசலூடாக குருதி வெளியேறும் தன்மை.
- ஏனைய நாட்களைவிட மலம் மிகவும் மெல்லியதாக வெளியேறும் தன்மை.
- மலம் கழித்தபின்பும் மலம் கழித்ததில் திருப்தியின்மை போன்ற உணர்வு.
- வயிற்று நோவு.
- எதிர்பாராத விதத்தில் உடல் நிறை குறைதல்.




## 4. மார்பகப்புற்றுநோய்

### நோய் அறிகுறிகள்



அண்மையில், மார்பின் உருவில் ஏற்பட்ட வித்தியாசம் அல்லது தெளிவாக மார்பக அளவில் காணப்படும் வித்தியாசம்.



தோடம்பழத்தின் தோலினை ஒத்த வித்தியாசம்.



மார்பகத்தில் காணப்படும் உட்குழிவு.



மார்பில் கட்டி அல்லது வீக்கம். தோலின் வெளியில் படரும் அடையாளமுடைய புண். மார்பில் சொறிவு ஏற்படல்.




முளைக்காம்பு உள்ளிளுக்கப் பட்டிருத்தல் அல்லது வித்தியாசமாய்க் காணப்படல்.

**மார்பகத்தில் ஏற்படும் இவ்வாறான மாற்றங்கள் யாவும் சுய மார்பகப் பரிசோதனை மூலம், மிக இலகுவாகக் கண்டுபிடிக்கலாம்.**

## 5. கருப்பைக் கழுத்துப் புற்றுநோய்

### நோய் அறிகுறிகள்

- யோனி வழியூடாக ஒழுங்கற்ற குருதிப் பெருக்கு.
- தாம்பத்திய உறவின் பின்னர், குருதி வெளியேறுதல்.
- யோனிவழியூடாக துர்நாற்றத்துடன் திரவக் கசிவு வெளியேறுதல்.
- மாதவிடாய் முற்றுப்பெற்ற(நின்ற) பெண்களின் யோனி வழியால் குருதி வெளியேறுதல்.




**“பப்” பரிசோதனை மூலம், கருப்பைக் கழுத்தின் இழையங்களில் ஏற்படும் வித்தியாசத்தை புற்றுநோய் தோன்றுவதற்கு முன்னரே அறிந்துகொள்ளலாம்.**